# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
வார்டு குழுத்தலைவர்கள், ஆளும்கட்சி
மற்றும் எதிர் கட்சித் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, மேற்கு,
தொண்டாமுத்தூர், பேரூர் மற்றும்
சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிகள்),
பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் நீலகிரி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 9454 / 2007 / எம்சி. 8 நாள் 24.5.2007**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - மே 2007-ல் நடைபெறுவது – தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 31.5.2007 ம் தேதி வியாழக் கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா உறால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து தலைமை அலுவலர்களும் மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் அனுப்பப்படுகிறது.

இணைப்பு : கூட்டக்குறிப்பு

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

/ உண்மைநகல் உத்திரவின்படி/

மன்றச் செயலர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## 31-5-2007-ம் தேதி மாமன்ற சாதாரணக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) | திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல் |
| ஆ) | தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி |
| வ.எண். | இ). தீர்மானத்திற்குரிய பொருள், |
| 1. | பொறியியல் பிரிவு - Jnnurm – ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் - கடன் தொகை அனுமதித்தல் - நிபந்தனைகள் ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 2. | பொறியியல் பிரிவு - வடக்கு மண்டலம் -வார்டு எண் 65- தார் சாலை புதுப்பித்தல் பணி - ரூ 22 லட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக . |
| 3 | கல்விப் பிரிவு - திரு க. சீராளன், அலுவலக உதவியாளர் - பணி மாறுதல் கோரியது – அனுமதி அளித்தல் - தொடர்பாக. |
| 4 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 61 – கே.கே.புதூர் பிரதான சாலை - ரூ 18 லட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 5 | மாமன்ற பிரிவு - அகில இந்திய மேயர்கள் மன்றம் - 2007-08 சந்தா செலுத்துவது – அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 6 | பொறியியல் பிரிவு- மேற்கு மண்டலம் - வார்டு எண் 61 கமலநாதன் நினைவு மேல்நிலைப்பள்ளி – கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் - ரூ16 லட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 7. | பொதுப்பிரிவு - டெக்ஸ்கோ நிறுவன ஓட்டுநர்கள் - 2007-08 ஒப்பந்த முறையில் பணியமர்த்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் தொடர்பாக. |
| 8. | பொறியியல் பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 54 – தார்தளம் புதுப்பித்தல் பணி - ரூ22.4 லட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 9 | பொது சுகாதாரம் - வீட்டில் வளர்க்கும் பிராணிகளுக்கு உரிமக் கட்டணம் விதித்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 10 | தெற்கு மண்டலம் - உக்கடம் மற்றும் காந்திபுரம் பேருந்து நிலையங்கள் - டெக்ஸ்கோ நிறுவன காவலர்கள் -பணி அமர்த்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 11 | கல்விப் பிரிவு - மாநகராட்சி நடுநிலை மற்றும் ஆரம்பப் பள்ளிகள் - வாடகைக் கட்டிடங்களில் இயங்குவது – 2007-08 வாடகைத் தொகை வழங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 12 | பொதுப்பிரிவு -பணியமைப்பு - வகுப்பு –II –நிர்வாக அலுவலர்/ கணக்கு அலுவலர் பணியிடம் - தேர்ந்த பெயர் பட்டியல் -மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 13 | பொறியியல் பிரிவு - தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தித் திட்டம் - 22 சாலைப் பணிகள் மேற்கொள்ளுதல் - மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக. |
| 14 | நகரமைப்பு பிரிவு - அங்கீகரிக்கப்படாத வீட்டு மனைகள் -- வரன்முறைப்படுத்துதல் - கால நீட்டிப்பு செய்தல் -அரசாணை வெளியிடப்பட்டது – பதிவு செய்தல் - தொடர்பாக |
| 15 | பொறியியல் பிரிவு- 13 அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக. |
| 16 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 68 –இரத்தினபுரி மேல்நிலைப்பள்ளியில் வகுப்பறைகள் கட்டுதல் - ரூ25 லட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 17 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 68 – இரத்தினபுரி மேல்நிலைப்பள்ளியில் வகுப்பறைகள் (முதல் தளம்)கட்டுதல்- ரூ 25 லட்சம் - நிர்வாக அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 18 | நகரமைப்பு பிரிவு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 25 – நகரளவு எண் 1266/14-குடியிருப்பு உபயோக மனை – வணிக உபயோகமாக மாற்றுதல் -மாமன்ற ஒப்புதல் கோருதல்- தொடர்பாக |

| | |
|---|---|
| 19 | நகரமைப்பு பிரிவு -வடக்கு மண்டலம் - சங்கனூர் கிராமம் -வாரி புறம்போக்கு காலைகள் -தென்னக ரயில்வேத்துறைக்கு நில உரிமை மாற்றம் செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 20 | நகரமைப்புப் பிரிவு - கிழக்கு மண்டலம் - உப்பிலிபாளையம் கிராமம் -நில அளவை எண் 153/1 பி முதலியன -1.58 ஏக்கர் நிலம் - கல்வி நில உபயோகம் - குடியிருப்பு நில உபயோகமாக மாற்றுதல்-மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 21 | கல்விபிரிவு - திரு வெ. ஜானகிராமன் ஆசிரியர், கோவை மற்றும் என்.எஸ். லோகநாதன், ஆசிரியர் சென்னை – மனமொத்த பணி மாறுதல் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 22 | கல்விபிரிவு - பாப்பநாய்க்கன்புதூர் உயர்நிலைப்பள்ளி-மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 23 | பொறியியல் பிரிவு- 2 அபிவிருத்தி பணிகள் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 24 | பொறியியல் பிரிவு - வார்டு 54- சுண்டக்காமுத்தூர் புறவழிச்சாலை (கோவர்த்தனா சாலை சந்திப்பு முதல் சிறுபாலம் வரை ) புதுப்பித்தல் பணி - ரூ25 லட்சம் - நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 25 | பொறியியல் பிரிவு - வார்டு 54- சுண்டக்காமுத்தூர் உக்கடம் புறவழிச்சாலை (சிறுபாலம் முதல் பழனியப்பா நகர் வரை ) புதுப்பித்தல் பணி - ரூ25 லட்சம் - நிர்வாக அனுமதி கோருதல்-தொடர்பாக |

**இணைப்பு - 1**

**பொருள் எண் : 1**

கடந்த 27.4.2007 அன்று நடைபெற்ற மாமன்ற சாதாரணக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் மன்றத்தின் ஒப்புதலுக்காக மீண்டும் சமர்பிக்கப்படுகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கென ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்துவதற்கான மான்யம் மற்றும் கடனுதவி வழங்குவது பற்றி தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் தனது கடித எண் TUFIDCO/JNNURM AM(M)/2007 நாள் 23-03-2007 தேதியில் மொத்த மதிப்பீடு ரூ. 9651.00 இலட்சத்தில் வட்டியில்லா கடன் 20 விழுக்காடு ரூ. 1930.20 இலட்சமும் மான்யம் 50 விழுக்காடு ரூ.4,825.50 இலட்சமும் மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதனை கீழ்க்கண்டவாறு கொடுத்துள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்ட பங்கு | | திருப்பிச் செலுத்துவற் கான காலம் | மாநகராட்சியின் பங்கு 30 சதவீதம் ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|
| | | | வட்டியில்லா கடன் 20 சதவீதம் ரூ. இலட்சத்தில் | மானியம் 50 சதவீதம் ரூ. இலட்சத்தில் | | |
| 1 | ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை | **9651.00** | **1930.20** | **4825.50** | 7 வருடம் | **2895.30** |

கோவை மாநகராட்சிக்கு ரூ. 1930.20 இலட்சம் ( வட்டியில்லா ) கடனுதவியும் மற்றும் மான்யம் ரூ. 4825.50 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 6755.70 இலட்சத்தினை தமிழ்நாடு நகர்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் வழங்க குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை ஏற்று மன்றத் தீர்மானம் கோரப்பட்டுள்ளதால் இது குறித்து மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள் விபரம்</u>

1) கோவை மாநகராட்சி ஜவஹர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்புத்திட்டத்தின் கீழ் ரூ. 9651.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்தி TUFIDCO நிபந்தனைகளுக்குட்பட்டு ரூ. 1930.20 இலட்சம் வட்டியில்லா கடனாகவும், ரூ. 4825.50 இலட்சம் மான்யமாகவும் பெற மாநகராட்சி ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.
2) கோவை மாநகராட்சி ஆணையர் இந்த கடன் மற்றும் மான்யம் பெற தேவையான அனைத்து ஆவனங்களில் கையொப்பம் இட அதிகாரம் வழங்கப்படுகிறது.
3) கடனை திரும்ப செலுத்தும் அட்டவணைப்படி கடனை திருப்பிச் செலுத்தலாம்.
4) இத்திட்டத்தின் செயலாக்கத்திற்கான மத்திய மற்றும் மாநில அரசுகளுடன் செய்யப்பட்டுள்ள ஒப்பந்தத்தின்படி கால அட்டவனை பின்பற்றப்படும்.
5) இக்கடனை திரும்பச் செலுத்துவதற்கு மாநகராட்சியின் வரவு செலவு திட்டத்தில் உரிய ஒதுக்கீடு செய்ய ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. கடன் முழுவதையும் உரிய காலத்தில் தவறாமல் செலுத்த உரிய சுழல் நிதி ஏற்படுத்தப்படும்.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 13087/2006/MD3

கூடுதல் அலுவலகக் குறிப்பு தனியாக இணைக்கப்பட்டுள்ளது.

27-04-2007 அன்று நடைபெற்ற மாமன்ற சாதாரண கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் எண் 2-ற்கான கூடுதல் அலுவலகக் குறிப்பு.

27-04-2007 அன்று நடைபெற்ற மாமன்ற சாதாரண கூட்டத்தில் மாமன்ற உறுப்பினா்கள் கேட்டுக் கொண்டதற்கினங்க கடந்த 08-05-2007-ல் மாநகராட்சி பிரதான அலுவலகததில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு அனுமதி பெறப்பட்ட விரிவான திட்ட அறிக்கையின் ( Detailed Project Report ) சாரம்சங்கள் மற்றும் அத்திட்டத்தின் செயலாக்க முறைகளையும் மாநகராட்சி ஆணையா் அவா்களால் விரிவான செயல் விளக்க படங்களுடன் ( Power Point Presentation ) விளக்கப்பட்டது. மேற்படி கூட்டத்தில் வணக்கத்திற்குரிய மேயா், துணை மேயா், மண்டலத்தலைவா்கள், நிலைக்குழுத் தலைவா்கள் உட்பட 63 மாமன்ற உறுப்பினா்கள் கலந்து கொண்டனா். மாமன்ற உறுப்பினா் எழுப்பிய ஐயப்பாடுகளுக்கு மாநகராட்சி ஆணையரால் தெளிவான பதிலுரைகள் தரப்பட்டன. மேலும் அக்கூட்டத்தில் மாமன்ற உறுப்பினா்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க மத்திய அரசு அனுமதித்துள்ள ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் சிறப்பம்சங்களை மாமன்ற உறுப்பினா்களின் பாா்வைக்கும், தகவலுக்கும் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

இத்திட்டத்தில் முதற் கட்ட குப்பை சேகரிப்பு பணிகள் அனைத்தையும் மாநகராட்சியால் செயல்படுத்தப்படவுள்ளது. இரண்டாம் கட்ட குப்பை சேகரிப்பு பணிகள் மற்றும் தரம் பிரிக்கப்பட்ட திடக்கழிவுகளை விஞ்ஞான முறைப்படி சுற்றுச் சூழல் பாதிக்காத வண்ணம் கழிவு செய்யும் பணிகள் மற்றும் அதனைச் சாா்ந்த பணிகள் அனைத்தையும் மத்திய நகா்புற அமைச்சகத்தின் வழிமுறைகளின்படி பொதுமக்கள் மற்றும் தனியாா் பங்களிப்புடன் (Public Private Partnership Arrangements) செயல்படுத்த அனுமதிக்கலாம். அவ்வாறு பொது மக்கள் மற்றும் தனியாா் பங்களிப்பு மூலம் செயல்படுத்தும் பொழுது மாநகராட்சியின் 30 சதவீதம் ( 30 %) பங்கு தொகையினை செலவழிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. மேலும் மாநில அரசு வழங்கவேண்டிய 20 சதவீதம் ( 20 %) பங்கு தொகையினை வட்டியில்லா கடனாக பெறுவதற்கு பதில் மாநில அரசின் முழு மான்யமாக மாநகராட்சிக்கு வழங்க அரசினரை கேட்டுக் கொள்ளலாம்.

ந.க.எண் : 13087 / 2006 / எம்.டி.3.

மாநகர மன்ற தீா்மானம் எண் 15 நாள் 31.05.07

பொதுமக்கள் மற்றும் தனியாா் பங்களிப்பு (Public Private Partnership) முறையில் நவீன குப்பை மாற்றும் நிலையங்கள் கட்டி பராமரிக்கும் பணிகள் உள்பட, இந் நிலையங்களில் இருந்து குப்பை அகற்றும் பணிகள், நவீன உரக்கிடங்கு நிறுவி பராமரிக்கும் பணிகள், சுகாதார கட்டமைப்பு (Sanitary landfill) ஏற்படுத்தி பராமரிக்கும் பணிகள் மற்றும் தேவைக்கேற்ப நவீன முறைகளில் கழிவுகளை அப்புறப்படுத்தும் (disposal) பணிகள் ஆகிய அனைத்துப் பணிகளையும் மத்திய நகா்ப்புற அமைச்சகம் வெளியிட்டுள்ள நிபந்தனைகளின்படி செயல்படுத்த தீா்மானிக்கப்பட்டது. இதன்மூலம் இத்திட்டத்திற்கு மாநகராட்சியின் பங்குத்தொகை 30 சதவீதம் செலவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாததோடு, பொதுமக்களின் பங்களிப்போடு தரமான சேவையை வழங்கவும் தீா்மானிக்கப்பட்டது.

மேலும் இத்திட்டத்திற்கு மாநில அரசு வழங்கவேண்டிய 20 சதவீத பங்குத்தொகையினை வட்டியில்லாக் கடனாக பெறுவதற்குப் பதிலாக மாநில அரசின் முழு மான்யமாக மாநகராட்சிக்கு வழங்க அரசினை கேட்டுக் கொள்ளவும் தீா்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோவை மாநகராட்சி

**பொருள் எண் - 2**

கோவை மாநகராட்சி- வடக்கு மண்டலம் - பிரிவு எண் 5 – வார்டு எண் 65 – சங்கனூர் தயிர் இட்டேரி சாலையிலிருந்து மணிஸ் நகர் வரை உள்ள தார் சாலையைப் புதுப்பித்துத் தருமாறு மாமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ 22,00,000/- க்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் - **4362 / 07 /MD2**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 16 நாள் 31.05.07**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

**பொருள் எண் - 3**

கல்வி – மாநகராட்சி பாப்பநாய்க்கன்புதூர் ஆரம்பப் பள்ளி அலுவலக உதவியாளர் திரு க. சீராளன் - பெரம்பலூர் மாவட்டம் கைகளத்தூர் அரசு உயர் நிலைப்பள்ளிக்கு மாறுதல் கோரியது – விண்ணப்பத்தை பரிந்துரை செய்து சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக சென்னை பள்ளிக்கல்வி இயக்குனருக்கு அனுப்ப மாமன்ற அனுமதி பெறுவது - தொடர்பாக

மாநகராட்சி பாப்பநாய்க்கன்புதூர் ஆரம்பப் பள்ளி அலுவலக உதவியாளர் திரு க. சீராளன் தமது மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் பாதுகாப்பு கருதி, தமது சொந்த ஊரான கைகளத்தூர் கிராமம், வேப்பந்தட்டை தாலுக்காவிலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளிக்கு மாறுதல் கோரியுள்ளார். அன்னாரது விண்ணப்பத்தை பரிந்துரை செய்து சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக சென்னை பள்ளிக்கல்வி இயக்குனருக்கு அனுப்ப மாமன்ற ஒப்புதல் பெறலாம் என கல்விக்குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. மேற்கண்ட பொருள் மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் - **10944 /2006 /k11**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 17 நாள் 31.05.07**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

**பொருள் எண் -4**

கோவை மாநகராட்சி – பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் வார்டு எண் 61 ல் கே.கே.புதூர் பிரதான சாலை மிகவும் பழுதடைந்து உள்ளதால் புதுப்பித்துக் கொடுக்கும்படி, இவ்வார்டு மாமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டதின்பேரில் மதிப்பீடு ரூ 18,00,000/- க்கு தயாரிக்கப்பட்டு உள்ளது.

மேற்கூறிய சாலை புதுப்பிக்கும் பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கு 2007-08 ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் - **4078 /07/MD4**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 18 நாள் 31.05.07**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

**பொருள் எண் -5**

கோயம்புத்தூர் மாநகர மன்றத்தின் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள், அகில இந்திய மேயர்கள் மன்றம், புதுடில்லியில் அங்கத்தினராக இருந்து வருகிறார். இதற்கு 2007-08 ம் நிதியாண்டிற்கான ஆண்டுச் சந்தாவாக ரூ 10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) செலுத்துமாறு இதன் செயலாளர் தனது கடித எண் 2684 / AICM நாள் 29/ 03/ 07 –ல் கேட்டுக் கொண்டுள்ளார்.

எனவே, இம்மாநகர மன்றத்தின் சார்பாக 2007-08 ம் நிதியாண்டின் ஆண்டு சந்தாவாக ரூ 10,000/–ஐ தலைவர், அகில இந்திய மேயர்கள் மன்றம், புதுடல்லி என்ற பெயரில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 4676/07/MC.8

**மாநகர மன்ற தீர்மானம் எண் 19 நாள் 31.05.07**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

**பொருள் எண் -6**

கோவை மாநகராட்சி – பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம், வார்டு எண் 61-ல் வெங்கிட்டாபுரம், கமலநாதன் நினைவு மேல்நிலைப்பள்ளியின் வடபகுதியில், இரண்டாம் தளத்தில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் அபிவிருத்தி பணிகள் செய்து கொடுக்கும்படி, இவ்வார்டு மாமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டதின் பேரில் மதிப்பீடு ரூ16.00.000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கு 2007-08 ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் . 1565 /07/ MD4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 20 நாள் 31.05.07**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

**பொருள் எண் -7**

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு டெக்ஸ்கோ நிறுவனத்தினர் மூலம் 01.04.2007 முதல் 31.03.2008 முடிய ஓராண்டு காலத்திற்கு டெக்ஸ்கோ ஓட்டுநர்களை தினக்கூலி அடிப்படையில் பணிபுரிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்தல் - தொடர்பாக

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒப்பந்த தினக்கூலி அடிப்படையில் 30 டெக்ஸ்கோ ஓட்டுநர்களை நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ஊதியம் ரூ 5484/-யும் அதற்கான சேவைக் கட்டணம் 12 % அதற்குண்டான சேவை வரி கட்டணம் 12.2% (கல்வி கட்டண வரி உள்பட ) என வழங்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இந்த ஒப்பந்த காலம் 31.03.2007 யுடன் முடிவடைகிறது.

இதைத் தொடர்ந்து டெக்ஸ்கோ நிறுவனத்தினர் மேற்படி ஒப்பந்தத்தை 01.04.2007 முதல் 31.03.2008 முடிய மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கும் பொருட்டு விருப்பம் தெரிவித்துள்ளனர். அதில் ஓட்டுநர் ஒருவருக்கு 8 மணி பணிக்கு தினக்கூலி அடிப்படையில்

மாதம் ஊதியம் ரூ 5484/-யும் அதற்குண்டான சேவை கட்டணம் 12% யும் சேவை வரி 12.24% யும் (கல்வி வரிக்கட்டணம் உள்பட) 30 ஓட்டுநர்களுக்கும் மேற்குறிப்பிட்ட காலத்திற்கு வழங்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் சேவை கட்டணம் மட்டும் 12.2% பதிலாக 12.24% என கூடுதலாக வழங்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே மேற்குறிப்பிட்ட கட்டண விகிதத்தில் 30 ஓட்டுநர்களை ஏற்கனவே உள்ள பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டு 01.04.2007 முதல் 31.03.2008 முடிய ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த முறையில் பணிபுரிய மன்றத்தின் அனுமதிக்காக சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் 3497 /07 /MC 5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 21 நாள் 31.05.07**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

**பொருள் எண்-8**

கோவை மாநகராட்சி பொறியியல் பிரிவு தெற்கு மண்டலம் பிரிவு எண் 5 வார்டு எண் 54 ல் உள்ள கோவிந்தசாமி பாதைக்கு பேரூர் சாலை சந்திப்பு முதல் சுண்டக்காமுத்தூர் கல்லாமேடு சாலை வரை மற்றும் அதன் குறுக்கு சந்துகளுக்கு தார்தளம் புதுப்பிக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 22,40,000/--க்கு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.88805/06/எம்.டி4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 22 நாள் 31.05.07**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

**பொருள் எண் -9**

பொது சுகாதாரம் - கோவை மாநகராட்சி வீடுகளில் வளர்க்கப்படும் நாய், ஆடு, மாடு, மற்றும் குதிரைகளுக்கு உரிமம் வழங்குவது மற்றும் நாய்களை வளர்த்து விற்கும் தொழில் புரிவோர் உரிமம் வழங்குவது சம்பந்தமாக.

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வீடுகளில் வைத்து வளர்க்கும் நாய், ஆடு, மாடு, மற்றும் குதிரைகளுக்கு உரிமம் பெறவும், நாய் வளர்த்து விற்கும் தொழில் புரிவோர் உரிமம் பெறவும் , வீட்டில் நாய் வளர்ப்போர் மற்றும் நாய் வளர்த்து விற்கும் தொழில் புரிவோர், அரசு கால்நடை மருத்துவமனையில் நாய்களுக்கு தடுப்பூசி போட்டு உரிய அத்தாட்சியுடன் விண்ணப்பித்து மாநகராட்சியில் உரிமம் பெற்று வளர்க்க வேண்டும். மற்ற பிராணிகளை வளர்ப்போரும் உரிமம் பெற வேண்டும் . இவ்வாறு வீட்டில் வளர்க்கப்படும் நாய்களால் மற்ற பிராணிகளால் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் வீட்டிற்குள்ளேயே வைத்து வளர்க்க வேண்டும். தெருக்கள் மற்றும் பொது இடங்களில் விடக்கூடாது. ஒவ்வொரு வருடமும் நாய்களுக்கு முறையாக தடுப்பூசி போட்டு உரிமம் புதுப்பிக்கப்பட வேண்டும். அதேபோல் மற்ற பிராணிகளுக்கும் உரிமம் ஒவ்வொரு வருடமும் உரிமக் கட்டணம் செலுத்தி புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

மேலும் மாநகராட்சி சட்டம் பிரிவு எண் 350, 352, 353 மற்றும் 354 பிரிவுகளின்படி, நாய், ஆடு, மாடு, குதிரைகள் வளர்ப்பவர்கள் முறையாக கட்டிடம் மற்றும் கொட்டகைகள் கட்டி பராமரிக்க வேண்டும். அவ்வாறு பிராணிகள் வளர்ப்பவர்கள் மாநகராட்சியில் விண்ணப்பித்து உரிமம் பெற வேண்டும். எனவே பிராணிகளுக்கான உரிமம் பெற உரிமக் கட்டணமாக கீழ்க்கண்ட தொகையை நிர்ணயிக்கலாம்.

---

| வ. எண் | பிராணிகள் | உரிமக் கட்டணம் (ஆண்டு ஒன்றிக்கு) |
|---|---|---|
| 1. | நாய் ஒன்றிக்கு | ரூ 20/- |
| 2. | ஆடு ஒன்றிக்கு | ரூ 10/- |
| 3. | மாடு ஒன்றிக்கு | ரூ 50/- |
| 4. | குதிரை ஒன்றிக்கு | ரூ 100/- |
| 5. | நாய் வளர்த்து விற்பனை செய்யும் உரிமம் | ரூ 500/- |

வீட்டில் வளர்க்கும் நாய்களுக்கும், மற்றும் இதர பிராணிகளான ஆடு, மாடு, குதிரை போன்ற இனங்களுக்கு உரிமம் பெற வேண்டும் என்பதற்கும் நாய்களை விற்பனை செய்யும் தொழில் புரிவோர் உரிமம் பெறவும் நடவடிக்கை எடுக்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

சுகாதார நிலைக்குழு எண் 4 நாள் 19.4.2007 ன்படி, வீட்டில் வளர்க்கும் பிராணிகளான நாய், ஆடு, மாடு, குதிரைகளுக்கு உரிமக் கட்டணம் மற்றும் நாய் வளர்த்து விற்கும் தொழில் புரிவோருக்கான உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண் : 2298 /2007 /எம்.இ. 4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 23 நாள் 31.05.07**

சுகாதார நிலைக்குழுவின் தீர்மான எண் 4 நாள் 19.4.2007 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

**பொருள் எண் -10**

பணியமைப்பு - கோவை மாநகராட்சியின் தெற்கு மண்டலத்திற்குட்பட்ட உக்கடம் பேருந்து நிலையம் மற்றும் காந்திபுரம் பேருந்து நிலையம் ஆகியவற்றில் டெக்ஸ்கோ நிறுவனம் மூலம் காவலாளிகளை நிர்ணயிக்கப்பட்டது –குறித்து.

இம்மாநகராட்சியில் தெற்கு மண்டலத்திற்குட்பட்ட உக்கடம் பேருந்து நிலையம் மற்றும் காந்திபுரம் பேருந்து நிலையங்களில் டெக்ஸ்கோ நிறுவனம் மூலம் 7 காவலாளிகளை மாதம் ஒன்றுக்கு ரூ 36701 வீதத்தில் 21.3.2006 முதல் 20.3.2007 வரையிலான காலத்திற்கு அமர்த்திக் கொள்ள மாமன்றத்தின் தீர்மானம் எண் 20 நாள் 26.06.2006 ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி நிறுவனத்திற்கு 20.4.2006 வரை தொகை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனத்திற்கு அரசு கடித எண் 21402/A/2006-2 Public (Ex-Serviceman) Department நாள் 13.05.2006 ன்படி சேவை வரி (Service Tax) 10.2 % லிருந்து 12.24% (Which includes Education Cess of 2% on 12% Service Tax) ஆக உயர்வு செய்துள்ளதால் அதன்படி மாதம் ஒன்றிற்கு ரூ 37381 வீதம் 21.4.2006 முதல் 20.11.2006 வரையிலான காலத்திற்கு ரூ 3,36,429-ஐ வழங்கக் கோரி பட்டியல் அளித்துள்ளார். மேற்குறிப்பிட்டவாறு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட மாதம் ஒன்றுக்கு ரூ 36701-க்கு பதிலாக மாதம் ஒன்றுக்கு ரூ37381 வீதத்தில் 21.4.2006 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட 20.3.2006 வரை வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் 21.3.2006 க்கு பிறகு உள்ள காலத்திற்கு மேற்படி டெக்ஸ்கோ நிறுவனத்தின் மூலம் மேற்குறிப்பிட்ட உக்கடம் பேருந்து நிலையம் மற்றும் காந்திபுரம் பேருந்து நிலையத்திற்கு

டெக்ஸ்கோ நிறுவனத்தின் மூலம் 7 காவலாளிகளை அமர்த்திக்கொள்வது குறித்து மன்றத்தின் முடிவு கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -

1. 21.4.2006 முதல் 20.3.2007 வரையிலான காலத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ37381 வீதத்தில் தொகை வழங்க அனுமதிக்கலாம்.

2. 21.3.2007 க்குப் பிறகு உள்ள காலத்திற்கு மேற்படி பணிக்கு டெக்ஸ்கோ மூலம் 7 காவலாளிகளை அமர்த்துவது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

ந.க.எண் -6083/01/C1(S)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 24 நாள் 31.05.07**

21.4.2006 முதல் 20.3.2007 வரையிலான காலத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ 37,381-வீதத்தில் தொகை வழங்கவும் 21.3.2007-க்கு பிறகு உண்டான காலத்திற்கு 7 காவலாளிகளை பணியமர்த்திக் கொள்ள அனுமதிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் டெக்ஸ்கோ மூலமாகவோ அல்லது டெக்ஸ்கோவில் பணியாளர்கள் கிடைக்கவில்லையெனில் தனியார் செக்யூரிட்டி சர்வீஸ் மூலமாகவோ 2 பெண்கள் உள்பட 10 நபர்களை மாமன்ற பாதுகாவலர்களாக நியமனம் செய்து கொள்ளவும் இதற்கு ஆகும் செலவினத்திற்கு அனுமதிக்கவும் தீர்மானிக்கப்பட்டது. மாமன்ற கூட்டம் நடைபெறாத நாட்களில் இதர பணிகளை கவனிக்க அனுமதிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

பொருள் எண்-11

மாநகராட்சி நடுநிலை மற்றும் ஆரம்பப்பள்ளிகள் - வாடகைக் கட்டிடங்கள் 2007-08ம் ஆண்டிற்கு வாடகை தொகை – உரிமையாளருக்கு வழங்க மன்றத்தின் ஒப்புதல் பெறுவது – தொடர்பாக.

19-04-2007 ம் நாளிட்ட கல்விக்குழு தீர்மான எண். 3 ல் ஒப்புதல் பெறப்பட்ட மாநகராட்சியின் சொந்த கட்டிடம் இல்லாத தனியார் கட்டிடங்களில் இயங்கி வரும் சிங்காநல்லூர் பகுதியிலுள்ள மாநகராட்சியின் கீழ்காணும் 3 பள்ளிகளுக்கு 2007-08 ம் ஆண்டில் ஓர் ஆண்டிற்கு வழங்கப்பட வேண்டிய தொகை ரூ.81,480/- (ரூபாய்.எண்பத்தி ஓராயிரத்து நானூற்றி எண்பது மட்டும்) கட்டிட உரிமையாளருக்கு மாநகராட்சி நிதியிலிருந்து செலவிட மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பள்ளியின் பெயர் | மாத வாடகை | ஓராண்டு வாடகை | வழங்கப்பட வேண்டியவர்/கட்டிட உரிமையாளர் |
|---|---|---|---|---|
| 1. | சிங்காநல்லூர் கிழக்கு ஆரம்பப்பள்ளி | ரூ.2,633/- | ரூ.31,596/- | தலைவர், சிங்காநல்லூர் ஆதி திராவிடர் சமூக சேவாசங்க அறக்கட்டளை. |
| 2. | சிங்காநல்லூர் தெற்கு ஆரம்பப்பள்ளி | ரூ.2,379/- | ரூ.28,548/- | செயலாளர் அங்தாந்திர கொல்ல சமூக சங்கம், சிங்காநல்லூர். |
| 3. | கிருஷ்ணராயபுரம் நடுநிலைப்பள்ளி | ரூ.1,778/- | ரூ.21,336/- | செயலாளர் தாமோதரம் தர்மஸ்தாபனம். |
| | | மொத்தம் | ரூ.81,480/- | |

அலுவலகக்குறிப்பு- “ஒப்புதல் வழங்கலாம்” ந.க.எண். 3367/07/கே14

மாநகர மன்ற தீர்மானம் எண் 25 நாள் 31.05.07

கல்விக்குழுவின் 19.04.07 ம் தேதிய தீர்மான எண் 3 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

## பொருள் எண் - 12

பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – கோவை – தமிழ்நாடு மாநகராட்சிகள் 1996ம் ஆண்டு பணியமைப்பு விதிகள் வகுப்பு-III பிரிவு-I வகை-1மற்றும் 2ல் உள்ள கண்காணிப்பாளர், உதவி வருவாய் அலுவலர் பதவியிலிருந்து வகுப்பு-II வகை-3 மற்றும் 4ல் உள்ள நிர்வாக அலுவலர், கணக்கு அலுவலர் பதவிக்கு தேர்ந்த பெயர் பட்டியல் (Panel) நியமன குழுவின் ஒப்புதல் பெற்று – மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.

தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1996ம் ஆண்டு பொது பணியமைப்பு விதிகள் வகுப்பு-III பிரிவு-I வகை-1மற்றும் 2ல் உள்ள கண்காணிப்பாளர், உதவி வருவாய் அலுவலர் பதவியிலிருந்து வகுப்பு-II வகை-3 மற்றும் 4ல் உள்ள நிர்வாக அலுவலர், கணக்கு அலுவலர்பதவிக்கு பதவி உயர்வு அளிக்க இவ்வலுவவக செயல்முறைகள் எண். 77730/06/எம்சி.2 நாள் 23.3.2007ல் வெளியிடப்பட்ட கண்காணிப்பாளர்/உதவி வருவாய் அலுவலர் பணிமூப்பு பட்டியலில் இருந்து அரசாணை எண்.368, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள் 18.10.93ன் படி தகுதி பெற்ற கீழ்கண்ட கண்காணிப்பாளர்/உதவி வருவாய் அலுவலர்களின் தேர்ந்த பெயர் பட்டியல் (Panel) நியமனக் குழுவின் ஒப்புதலுக்கு வைக்கப்ப ட்டது.

| வ.எண். | பெயர் மற்றும் பதவி (திருவாளர்கள்/திருமதிகள்) |
|---|---|
| 01. | ஆர்.பொன்னம்மாள், உதவி வருவாய் அலுவலர் |
| 02. | எம்.பொன்முடி, உதவி வருவாய் அலுவலர் |
| 03. | டி.ஜான்பாஸ்கோ, உதவிவருவாய் அலவலர் |
| 04. | எ.அர்ஜுனன், கண்காணிப்பாளர் |
| 05. | எல்.ஜெயசந்திரன், கண்காணிப்பாளர் |

நியமனக்குழு தனது தீர்மான எண் 2. நாள் 30.4.007 ல் ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானித்துள்ளது. இதனை மாமன்றத்தின் ஒப்புதலுடன் அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு நிர்வாக அலுவலர் /கணக்கு அலுவலர் பணியிடங்களுக்கு பதவி உயர்வு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

<u>அலுவலக குறிப்பு - ஒப்புதல் வழங்கலாம்</u> ந.க.எண் 5015/2007/MC2

### மாநகர மன்ற தீர்மானம் எண் 26 நாள் 31.05.07

அலுவலகக்குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

## பொருள் எண்- 13

கோவை மாநகராட்சி பொறியியல் பிரிவு - தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சாலைகள் அபிவிருத்தி திட்டம் 2005-2006-ன் கீழ் தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதிய சேவையகம் மூலம் 167 பணிகளுக்கு ரூ. 2684.80 இலட்சத்திற்கு மாமன்ற தீர்மான எண் 176, நாள் 28-09-2005-ல் ஒப்புதல் அளித்துள்ளது. கீழ்கண்ட பணிகளுக்கு 15-03-2007-ம் தேதி நான்காம் அழைப்பாக ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதிய சேவையகத்தின் ஒப்புதல் 30-04-2007 அன்று பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க 03-05-2007-அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட்டுள்ள சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 12893/05/ எம்.டி.3. | வார்டு எண் 15 மசக்காளிபாளையம் மற்றும் சௌரிபாளையம் இணைப்பு சாலையில் தார்தளம் புதுப்பித்தல். | 19.50 | 15-03-07 நான்காம் அழைப்பு | திரு. என். துரைசாமி | 4.93 % கூடுதல் |
| 2. | 8149/05/ எம்.டி.3. | வார்டு எண் 15, சௌரிபாளையம் சாலை மாதாகோவில் வீதியில் சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் புதுப்பித்தல். | 12.00 | 15-03-07 நான்காம் அழைப்பு | தி/ள் எம். எஸ். இஞ்சினியர்ஸ் | 4.99% கூடுதல் |
| 3. | 12912/05/ எம்.டி.3. | வார்டு எண் 15 சௌரிபாளையம் பெரியார் நகர் சாலைகளுக்கு மறுதார் தளம் அமைத்தல். | 5.00 | 15-03-07 நான்காம் அழைப்பு | தி/ள் பி. செந்தில் அன் கோ | 4.80 % கூடுதல் |
| 4. | 12911/05/ எம்.டி.3. | வார்டு எண் 14 ஐயர் ஆஸ்பத்திரி சாலையில் தார்தளம் புதுப்பித்தல் | 8.50 | 15-03-07 நான்காம் அழைப்பு | தி/ள் கே.ஜி.லட்சுமிபதி அன் கோ. | 4.88 % கூடுதல் |
| 5. | 12887/05/ எம்.டி.3. | வார்டு எண் 10 லட்சுமிபுரம் பிரதான சாலையில் தார்தளம் புதுப்பித்தல் | 11.50 | 15-03-07 நான்காம் அழைப்பு | திரு. கே. நடராஜ் | 4.92 % கூடுதல் |
| 6. | 16367/05/ எம்.டி.3. | வார்டு எண் 16 ஆர்.கே.மில் பி.காலனியில் தார்தளம் புதுப்பித்தல் | 8.00 | 15-03-07 நான்காம் அழைப்பு | திரு. ஏ. வெங்கடாசலம். | 4.52 % கூடுதல் |
| 7. | 13249/05/ எம்.டி.3 | வார்டு எண் 19 ஜி. ஆர். டி. சாலைக்கு தார்தளம் புதுப்பித்தல் | 5.75 | 15-03-07 நான்காம் அழைப்பு | தி/ள் கே.ஜி.லட்சுமிபதி அன் கோ. | 4.47 % கூடுதல் |
| 8. | 13250/05/ எம்.டி.3. | வார்டு எண் 19 ஜெயசிம்மபுரம் சாலைக்கு தார்தளம் புதுப்பித்தல் | 9.60 | 15-03-07 நான்காம் அழைப்பு | தி/ள் கே.ஜி.லட்சுமிபதி அன் கோ. | 4.45 % கூடுதல் |
| 9. | 12925/05/ எம்.டி.3. | வார்டு எண் 9 ராமானுஜ நகர் இட்டேரி வீதியில் புது தார்தளம் அமைத்தல் | 4.70 | 15-03-07 நான்காம் அழைப்பு | திரு. ஏ. வெங்கடாசலம். | 4.66 % கூடுதல் |
| 10. | 14239/05/ எம்.டி.3. | வார்டு எண் 11 கோ-ஆப்ரேடிவ் காலனீ குறுக்கு சாலைக்கு தார்தளம் புதுப்பித்தல் | 10.00 | 15-03-07 நான்காம் அழைப்பு | திரு. ஏ. வெங்கடாசலம். | 4.45 % கூடுதல் |
| 11. | 12587/05/ எம்.டி.3 | வார்டு எண் 72 கணபதி மாநகர் பிளாக் நம்பர் 2-ல் சாலையில் தார்தளம் புதுப்பித்தல் | 18.00 | 15-03-07 நான்காம் அழைப்பு | தி/ள். சரவணா கன்ஸ்டிரக்சன்ஸ் | 4.92% கூடுதல் |
| 12. | 12585/05/ எம்.டி.3. | வார்டு எண் 72 கணபதி மாநகர் பிளாக் நம்பர் 4-ல் சாலையில் தார்தளம் புதுப்பித்தல் | 9.40 | 15-03-07 நான்காம் அழைப்பு | தி/ள். சரவணா கன்ஸ்டிரக்சன்ஸ் | 4.82% கூடுதல் |
| 13. | 7306/05/ எம்.டி.3. | வார்டு எண் 2 விளாங்குறிச்சி சாலையில் மறுதார்தளம் அமைத்தல் | 10.00 | 15-03-07 நான்காம் அழைப்பு | திரு.எம்.துரைசாமி | 4.94 % கூடுதல் |
| 14. | 29863/05/ எம்.டி.3. | வார்டு எண் 72 கணபதி மாநகர் சாலைக்கு தார்தளம் அமைத்தல். | 25.00 | 15-03-07 நான்காம் அழைப்பு | திரு. ஆர். கிருஷ்ணசாமி | 4.84 % கூடுதல் |
| 15. | 7115/05/ எம்.டி.3. | வார்டு எண் 72 பாரதி நகர் மற்றும் போலீஸ் குவார்ட்ர்ஸ் சாலையில் தார்தளம் புதுப்பித்தல் | 8.20 | 15-03-07 நான்காம் அழைப்பு | திரு. ஏ. அம்மாசையப்பன் | 4.75 % கூடுதல் |
| 16. | 12016/05/ எம்.டி.3. | வார்டு எண் 65 எஸ்பி. கண்ணுசாமி சாலையில் ரயில்வே லைன் முதல் தயிர்இட்டேரி சாலை வரை மறுதார்தளம் அமைத்தல். | 20.00 | 15-03-07 நான்காம் அழைப்பு | திரு. ஏ. அம்மாசையப்பன் | 4.81 % கூடுதல் |
| 17. | 12257/05/ எம்.டி.3. | வார்டு எண் 65 நல்லாம் பாளையம் சாலையில் சோப் கம்பெனி முதல் கிழக்காக தார்தளம் புதுப்பித்தல் | 25.00 | 15-03-07 நான்காம் அழைப்பு | திரு. கே. நடராஜன் | 4.94 % கூடுதல் |
| 18. | 12951/05/ எம்.டி.3. | வார்டு எண் 44 தெலுங்கு வீதியில் தார்தளம் புதுப்பித்தல் | 4.80 | 15-03-07 நான்காம் அழைப்பு | திரு. ஏ. அம்மாசையப்பன் | 4.71 % கூடுதல் |
| 19. | 8548/05/ எம்.டி.3. | வார்டு எண் 45 ராஜவீதி மற்றும் தாமஸ் வீதி இணைப்பு சாலையில் தார்தளம் புதுப்பித்தல்., | 6.00 | 15-03-07 நான்காம் அழைப்பு | திருமதி. எம். சரோஜினி | 4.74 % கூடுதல் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 20. | 9949/06/ எம்.டி.3. | வார்டு எண் 49 கிழக்கு பெரியசாமி சாலையில் மறுதார்தளம் அமைத்தல் | 17.00 | 15-03-07 நான்காம் அழைப்பு | தி/ள் கே.ஜி.லட்சுமிபதி அன் கோ. | 4.98 % கூடுதல் |
| 21. | 8041/05/ எம்.டி.3. | வார்டு எண் 23 சௌரிபாளையம் சாலையில் நடைபாதை அமைத்தல். | 4.00 | 15-03-07 நான்காம் அழைப்பு | தி/ள் எம். எஸ். இஞ்சினியர்ஸ் | 4.92% கூடுதல் |
| 22. | 13242/05/ எம்.டி.3. | வார்டு எண் 4 நேதாஜி புரம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் காலனி மெயின் சாலையில் தார்தளம் புதுப்பித்தல். | 25.00 | 15-03-07 நான்காம் அழைப்பு | தி/ள். சரவணா கன்ஸ்டிரக்சன்ஸ் | 4.96% கூடுதல் |

**அலுவலகக் குறிப்பு :**

**வரிசை எண் 1 முதல் 22 வரையிலான பணிகள் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகள் என்பதாலும், குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும், இவை அனைத்தும் நான்காவது அழைப்பு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஆனதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட இப்பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும், அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் மன்றத்தின் ஒப்புதலை எதிர் நோக்கி ஒப்புதல் செய்ததனை அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 7099/05/ எம்.டி.3**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 27 நாள் 31.05.07**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோவை மாநகராட்சி**

---

**பொருள் எண் -14**

**அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் அமைந்துள்ள வீட்டு மனைகளை வரன்முறைப்படுத்துவதற்கான விண்ணப்பங்கள் பெறுவதற்கான காலக்கெடுவை 31.12.2007 வரை நீட்டிப்பு செய்து அரசாணை (நிலை) எண். 56 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி1) துறை நாள் -30.4.2007 –ல் அரசு உத்திரவிட்டுள்ளது.**

**மேற்படி அரசாணையில் ஏற்கனவே உள்ள அரசாணை (நிலை) எண். 59 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் -25.07.2006-ல் குறிப்பிட்ட திட்டம் மற்றும் அதன் நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமின்றி முறைப்படுத்த விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கால அளவை மட்டும் 31.12.2007 வரை நீட்டிக்கலாம் என்று ஆணையிட்டுள்ளது.**

**மேற்படி அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு - பதிவு செய்யலாம். ந.க.எண் -12042 /1999 /MH5**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 28 நாள் 31.05.07**

**அலுவலகக்குறிப்பு பதிவு செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோவை மாநகராட்சி**

---

## பொருள் எண் : 15

**கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 3-05-2007-அன்று பரிந்துரை செய்துள்ளது.**

| வ. எ ண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட் டுத் தொகை ரூ. இலட்சத் தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட் டுள்ள சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 5748/06/ எம்.டி.2. | வார்டு எண் 30 காந்திபுரம் 3வது வீதி தொடர்ச்சியில் மறுதார்தளம் அமைத்தல் | 3.50 | 12-04-07 நான்காம் அழைப்பு | திரு. ஏ. அம்மாசையப்பன் | 4.97% அதிகம் |
| 2 | 6997/05/ எம்.டி.2. | வார்டு எண் 30 காந்திபுரம் 3வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல் | 2.50 | 12-04-07 ஏழாம் அழைப்பு | திரு. ஏ. அம்மாசையப்பன் | 4.88% அதிகம் |
| 3 | 9478/04/ எம்.டி.2. | வார்டு எண் 30 காந்திபுரம் 3 மற்றும் 4 வது வீதி தொடர்ச்சி மற்றும் குறுக்குசாலையில் மறுதார்தளம் அமைத்தல் | 4.75 | 12-04-07 ஒன்பதாம் அழைப்பு | திரு. ஏ. அம்மாசையப்பன் | 4.89% அதிகம் |
| 4 | 6355/06/ எம்.டி.2. | வார்டு எண் 14 உடையாம்பாளையம் நேதாஜி வீதி மற்றும் தொட்டச்சியம்மன் கோவில் வீதியில் மறுதார்தளம் அமைத்தல் | 5.00 | 12-04-07 ஐந்தாம் அழைப்பு | திரு. கே. நடராஜன் | 4.76% அதிகம் |
| 5 | 6359/06/ எம்.டி.2. | வார்டு எண் 21 அலமேலுமங்கம்மாள் லேஅவுட் 1,2 ல் தார்தளம் பலப்படுத்துதல் | 5.00 | 12-04-07 ஐந்தாம் அழைப்பு | தி/ள். செந்தில் அன் கோ | 4.63% அதிகம் |
| 6 | 6357/06/ எம்.டி.2. | வார்டு எண் 14 எம்ஜி.ஆர் நகரில் மறுதார்தளம் அமைத்தல் | 5.00 | 12-04-07 ஐந்தாம் அழைப்பு | திருமதி. எம். சரோஜினி | 4.80% அதிகம் |
| 7 | 5545/06/ எம்.டி.2. | வார்டு எண் 2 ஜெய் நகரில் மறுதார்தளம் அமைத்தல் | 5.00 | 12-04-07 மூன்றாம் அழைப்பு | தி/ள். குரு கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 4.99% அதிகம் |
| 8 | 16438/05/ எம்.டி.2. | வார்டு எண் 1,2,3 மற்றும் 17 ல் உள்ள மாநகராட்சி பள்ளிகளில் இருக்கும் கழிப்பறைகளில் அபிவிருத்திப் பணிகள் செய்தல் | 2.50 | 12-04-07 நான்காம் அழைப்பு | தி/ள்பாக்யா பில்டர்ஸ் | 4.50% அதிகம் |
| 9 | 9918/05/ எம்.டி.2. | வார்டு எண் 3 வி.கே.ஆர் நகரில் மறுதார்தளம் அமைத்தல் | 2.60 | 12-04-07 நான்காம் அழைப்பு | தி/ள். குரு கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 4.98% அதிகம் |
| 10 | 5408/06/ எம்.டி.2. | வார்டு எண் 71 ல் கஸ்தூரிபாய் வீதியில் மறுதார்தளம் அமைத்தல் | 2.25 | 12-04-07 நான்காம் அழைப்பு | தி/ள். செந்தில் அன் கோ | 4.57% அதிகம் |
| 11 | 0521/07/ எம்.டி.2. | வார்டு எண் 14 ல் ராஜீவ் காந்தி நகர் குறுக்கு சாலையில் தார்தளம் அமைத்தல் | 2.45 | 12-04-07 இரண்டா ம் அழைப்பு | திரு. ஏ. அம்மாசையப்பன் | 4.79% அதிகம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12 | 17009/05/ எம்.டி.2. | வார்டு எண் 4 உப்பிலிபாளையம் தெற்கு நடுநிலைப்பள்ளியில் கழிப்பறை மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல் | 5.00 | 12-04-07 ஆறாம் அழைப்பு | திருமதி. வி. பாக்கியம் | 4.95% அதிகம் |
| 13 | 17010/06/ எம்.டி.2. | வார்டு எண் 6 ல் நெசவாளர் காலனி ஆரம்பப்பள்ளியில் கழிப்பறை கட்டுதல் | 5.00 | 12-04-07 ஆறாம் அழைப்பு | திருமதி. கே. பங்கஜம் | 4.91% அதிகம் |

**மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது**

**அலுவலகக் குறிப்பு : வரிசை எண் 1 முதல் 13 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் வழங்கும் பணியாக உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் இதனை அனுமதிக்கலாம்.**

**ந.க.எண். 5748/06/எம்.டி2.**

## மாநகர மன்ற தீர்மானம் எண் 29 நாள் 31.05.07

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோவை மாநகராட்சி**

---

## பொருள் எண் : 16

**கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம் - பிரிவு எண் 5 வார்டு எண் 68 இரத்தினபுரி மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் பணிக்கென தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 25,00,000/--க்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி கோருதல்.**

**இரத்தினபுரி மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்ட கோரி பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் கடிதம் கொடுத்துள்ளார்கள். இதன் நிர்வாகப்பொறியாளர் அவர்கள் நேரில் ஆய்வு செய்து தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 25,00,000/-க்கு தொழில்நுட்ப அனுமதி அளித்துள்ளார்கள்.**

**மேற்படி பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.**

**அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம்.** **ந.க.எண் 2437/2007/எம்.டி.2.**

## மாநகர மன்ற தீர்மானம் எண் 30 நாள் 31.05.07

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோவை மாநகராட்சி**

---

**பொருள் எண்** : 17

கோவை மாநகராட்சி – வடக்கு மண்டலம் - வார்டு எண் 68 இரத்தினபுரி மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் (முதல் தளத்தில்) கட்டுதல் பணிக்கென தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 25,00,000/-க்கு நிர்வாக அனுமதி கோருதல்.

இரத்தினபுரி மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்ட கோரி பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் கடிதம் கொடுத்துள்ளார்கள். இதன் உதவி நிர்வாகப்பொறியாளர் அவர்கள் நேரில் ஆய்வு செய்து தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 25,00,000/-க்கு தொழில்நுட்ப அனுமதி அளித்துள்ளார்கள்.

மேற்படி பணிக்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 2438/2007/எம்.டி.2.

**மாநகர மன்ற தீர்மானம் எண் 31 நாள் 31.05.07**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

**பொருள் எண் : 18**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 25 கதவு எண் 27-30 மேற்கு கிளப் சாலை ரேஸ் கோர்ஸ், நகரளவு வார்டு எண் (A) 1 -ல், நகரளவு எண் 1266/14 -ல் உள்ள குடியிருப்பு உபயோக மனையை வணிக உபயோகமாக மாற்றம் செய்ய அனுமதி கோரி திருவாளர் ITC லிமிடெட் ஹோட்டல் டிவிசன் நிறுவனத்தினர், நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களுக்கு மாநகராட்சி மூலமாக உரிய ஆவணங்களுடன் நாள். 26.3.07 -ல் விண்ணப்பித்துள்ளார்.

மேற்படி நில உபயோக மாற்றம் செய்ய கோரும் மனையின் பரப்பு 45956 ச.அடி அல்லது 4271 ச.மீ, இம்மனையிடம் கோயம்புத்தூர் விரிவு அபிருத்தி திட்டம் எண். 8 -ல் அமைந்துள்ளது. கோயம்புத்தூர் முழுமை திட்டப்படி மேற்படி இடம் குடியிருப்பு பகுதியில் உள்ளது. இவ்விடத்தில் ITC நிறுவனத்தினர் அலுவலக கட்டிடம் இயங்கிவருகிறது. மேற்படி இடத்திற்கு மேற்கில் பள்ளியும் தெற்கில் மில்லின் சுற்றுச்சுவரும், வடக்கில் வீடுகளும் அமைந்துள்ளன. இப்பகுதியில் வணிக உபயோகக் கட்டிடங்கள் பல உள்ளன. மேற்படி கட்டிடத்திற்கு 06-07 வரை சொத்துவரி வசூலிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி நிலத்தினை குடியிருப்பு உபயோகத்திலிருந்து, வணிக உபயோகமாக மாற்றம் செய்ய நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலை குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில், குழு தனது தீர்மான எண். 20. நாள்: 22.5.2007 -இல் பொருளை மாமன்றத்திற்கு பரிந்துரை செய்ய தீர்மானத்துள்ளதன் பேரில், மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக் குறிப்பு : குடியிருப்பு நில உபயோகத்திலிருந்து வணிக உபயோகமாக மாற்றம் செய்யலாம்.

எண் : 3339 / 07/H1 (s).

**மாநகர மன்ற தீர்மானம் எண் 32 நாள் 31.05.07**

நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் 22.05.07 ம் தேதிய தீர்மான எண் 20 ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

## பொருள் எண் : 19

மாவட்ட வருவாய் அலுவலர், அவர்கள் ந.க. எண். 18613/2003/ஆ4 நாள். 24.1.2007 தேதிய கடிதத்தில் தென்னக ரயில்வே துறை கோரியதற்கிணங்க கோயம்புத்தூர் மாவட்டத்தில் இருகூர் முதல் கோயம்புத்தூர் மத்திய ரயில்நிலையம் வரை இருப்புப் பாதை இரட்டிப்பு செய்யும் பணிக்கென கோயம்புத்தூர் வடக்கு வட்டம், சங்கனூர் கிராமத்தில் கீழ்கண்டுள்ள வாரி புறம்போக்கு காலைகளை தென்னக ரயில்வே துறைக்கு நில உரிமை மாற்றம் செய்வது குறித்து மாமன்ற தீர்மானத்துடன் அனுப்பி வைக்க கோரியுள்ளார்.

| வ.எண். | க.ச.எண் | மொத்த விஸ்தீரணம் (ஏக்கரில்) | நில உரிமை மாற்றம் செய்யப்படவுள்ள விஸ்தீரணம் (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1 | 50/1 | 0.44 | 0.03 |
| 2 | 153 | 0.98 | 0.07 |
| 3 | 162 | 0.33 | 0.01 |
| | | | 0.11 ஏக்கர். |

மேற்குறிப்பிட்டுள்ள 0.11 ஏக்கர் புறம்போக்கு நிலங்களை தென்னக ரயில்வே துறைக்கு இருகூர் முதல் கோயம்புத்தூர் சந்திப்பு ரயில் நிலையம் வரை இருப்புப்பாதை இரட்டிப்பு செய்யும் பணிக்கென நில உரிமை மாற்றம் செய்வது குறித்து நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் முடிவிற்கு பொருள் சமர்பிக்கப்பட்டதில், குழு தனது தீர்மான எண். 23 நாள். 22.5.07 -ல் நில மாற்றம் செய்ய அனுமதித்துள்ளதன் பேரில், மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : நில மாற்றம் செய்ய அனுமதிக்கலாம். எண் : 9648/06/எச் 2(N).

### மாநகர மன்ற தீர்மானம் எண் 33 நாள் 31.05.07

நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் 22.05.07 ம் தேதிய தீர்மான எண் 23 ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

## பொருள் எண் : 20

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், உப்பிலிபாளையம் கிராமம், நில அளவை எண் 153/1பி, 2பி, 3பி, 4,பி பகுதி, 148/2 பகுதியில் 1.58 ஏக்கர் நிலத்தினை கல்வி நில பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு நில உபயோக மாற்றம் செய்ய கோரி திருவாளர்கள். P.K. வெங்கடேஸ்வரன் மற்றும் திரு. V. சந்தானம்பிள்ளை ஆகியோர் 22.3.2007 -ம் தேதிய விண்ணப்பத்தில் கோரியுள்ளார்கள்.

மேற்படி இடம் சிங்கநல்லூர் விரிவு அபிவிருத்தி திட்டம் எண். 7 -லும் முழுமைத்திட்டத்தின்படி குடியிருப்பு பகுதியாக அமைந்துள்ளது. விரிவு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மனுதாரரின் மனையிடம் பள்ளி உபயோகம் (High School) என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி இடம் G.V. ரெசிடன்சி அருகில் உப்பிலிபாளையம் சாலையில், மாநகராட்சி தேர்தல் வார்டு எண். 10 -ல் அமைந்துள்ளது. மேற்படி பகுதி குடியிருப்பாக அபிவிருத்தியடைந்து வருகிறது.

நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழு தீர்மான எண். 24 நாள் : 22.5.07 -ல் நில உபயோக மாற்றம் செய்ய அனுமதித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

எனவே, உப்பிலிபாளையம் கிராமம் க.ச. எண். 153/1பி, 2பி, 3பி, 4பி பாகம், 148/2 பாகம் உள்ள 1.58 ஏக்கர் நிலத்தினை கல்வி உபயோகத்திலிருந்து குடியிருப்பு நில உபயோக பயன்பாட்டிற்கு மாற்றம் செய்து அனுமதி கோரும் மனுதாரரின் கோரிக்கையினை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : குடியிருப்பு நில உபயோகமாக மாற்றம் செய்யலாம்.

எண் : 4928/2007/H1(கி).

**மாநகர மன்ற தீர்மானம் எண் 34 நாள் 31.05.07**

நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவின் 22.05.07 ம் தேதிய தீர்மான எண் 24 ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

**பொருள் எண் :21**

கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் 18.05.2007 –ம் நாளது தீர்மான எண் 2-ல், மாநகராட்சி குப்பகோணாம்புதூர் உயர்நிலைப்பள்ளி பட்டதாரி (கணிதம்) ஆசிரியர் திரு வெ. ஜானகிராமன் அவர்களும், சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி பட்டதாரி (கணிதம்) ஆசிரியர் திரு N.S. லோகநாதன் அவர்களும் மனமொத்த இடமாறுதல் கோரிய விண்ணப்பத்தை பரிந்துரை செய்து, நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசு பள்ளி கல்வித்துறை செயலர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதல் பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்காண் கல்விக் குழுவின் தீர்மானத்தின்படி, மேற்காண் பொருள் மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் .1657 /07/ கே 7

**மாநகர மன்ற தீர்மானம் எண் 35 நாள் 31.05.07**

கல்வி , பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் 18.05.07 ம் தேதிய தீர்மான எண் 2 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

**பொருள் எண் :22**

கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் 18.05.2007 –ம் நாளது தீர்மான எண் 01-ல், கோவை மாநகராட்சி 59-வது வார்டு மாமன்ற உறுப்பினர் மற்றும் கல்விக்குழுத் தலைவர் திரு ஆர். கல்யாணசுந்தரம் அவர்கள், அவரது வட்டாரத்திலுள்ள மாநகராட்சி பாப்பநாய்க்கன்புதூர் உயர்நிலைப்பள்ளியினை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்த கோரியதன்படி, மேற்காண் பள்ளியினை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்த பொதுமக்கள் பங்குத்தொகை ரூபாய் இரண்டு லட்சத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்தி அரசு கல்வித் துறைக்கு விண்ணப்பிக்க மாமன்ற ஒப்புதல் பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்காண் கல்விக் குழுவின் தீர்மானத்தின்படி, மேற்காண் பொருள் மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் .2606 /07/ கே 2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 36 நாள் 31.05.07**

கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் 18.05.07 ம் தேதிய தீர்மான எண் 1 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

**பொருள் எண் : 23**

கோவை மாநகராட்சி பகுதிகளில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க 30-04-2007-அன்று பரிந்துரை செய்துள்ளது.

| வ. எ ண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட டுத் தொகை ரூ. இலட்சத் தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரா் பெயர் | ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிட் டுள்ள சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 199952/ 06/ எம்.டி.3. | வார்டு எண் 18 பகவத்சிங் சாலை, கிருஷ்ணசாமி சாலை மற்றும் வெங்கிடசாமி சாலைகளில் மழைநீா் வடிகால் மற்றும் மூடுபலகை அமைத்தல் | 6.30 | 18-04-07 இரண்டாம் அழைப்பு | திருமதி. கே. ரேணுகா தேவி | 4.95% அதிகம் |
| 2 | 6641/06 /எம்.டி.4. | வார்டு எண் 64 மேட்டுப்பாளையம் ரோடு மற்றும் சிவானந்தாகலனி பைபாஸ் ரோடு சந்திப்பில் சிறுபாலம் திரும்பக் கட்டுதல் | 13.00 | 18-04-07 இரண்டாம் அழைப்பு | தி/ள். என்.பி.கே. அசோசியேட்ஸ் | 4.92% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : வரிசை எண் 1 மற்றும் 2 வரையிலான பணிகள் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதை விட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் வழங்கும் பணியாக உள்ளதாலும் மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் இதனை அனுமதிக்கலாம்.

ந.க.எண். 199952/06/எம்.டி3.

**மாநகர மன்ற தீர்மானம் எண் 37 நாள் 31.05.07**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

**பொருள் எண் : 24**

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 54-ல் உள்ள சுண்டக்காமுத்தூர் புறவழிச் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே உக்கடம் புறவழிச் சாலையை கோவா்த்தனா சாலை சந்திப்பு முதல் சிறுபாலம் வரை புதுப்பிக்க ரூ. 25.00/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி பணியை மேற்கொள்ள நிா்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்குப் பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 9840 /07/ எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 38 நாள் 31.05.07**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோவை மாநகராட்சி

---

## பொருள் எண் 25

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 54-ல் உள்ள சுண்டக்காமுத்தூா் புறவழிச் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளது. எனவே சுண்டக்காமுத்தூா் உக்கடம் புறவழிச் சாலையை பிரதான சிறுபாலம் முதல் பழனியப்பா நகா் வரை புதுப்பிக்க ரூ. 25.00/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி பணியை மேற்கொள்ள நிா்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்குப் பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண் 9893 /07/ எம்.டி.4

## மாநகர மன்ற தீா்மானம் எண் 39 நாள் 31.05.07

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

( ஒ-ம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோவை மாநகராட்சி

---

( ஒ-ம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோவை மாநகராட்சி